*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# புறநானூற்றில் அறநெறிச்சிந்தனைகள்

**முனைவர். இல. தங்கராஜ்**
**உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை**
**தரங்கைப்பேராயர் மாணிக்கம் லுத்தரன்**
**கல்லூரி பொறையார் 609307.**

**ஆய்வுச் சுருக்கம்**

அறம் குறித்த செய்தியானது காலம் காலமாக விரிவடைந்து கொண்டே வந்திருக்கிறது. சங்க காலத்தில் அறமெனக் கருதப்பட்டவற்றில் சில சங்ககாலத்தின் பிற்காலங்களில் அறமற்ற செயல்களாகவே கருதப் பெற்றுள்ளன. மேலும் பல புதிய ஒழுக்கங்கள் அறங்களாக கையாளப்பட்டுள்ளன. நீதி இலக்கியங்களின் காலத்தில் அ டயட்றம் குறித்த மதிப்பீடுகள் பெருமளவு விரிவு படுத்தப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. நீதி சொல்வதல்ல அறம். ஆயினும் நீதியைக் காட்டிலும் அறம் என்பது நெகிழ்வுத் தன்மையுடையதாக விளங்கியுள்ளதைக் காண முடிகிறது. பொய் சொல்வது ஆகாது என்பது நீதி .நன்மை பயக்குமெனில் பொய் சொல்லலாம் என்பது அறம். அறம் என்பது இன்பத்தைக் கொடுப்பது மட்டுமன்றி அதற்குக் காரணமான செல்வத்தையும் நிச்சயம் கொடுப்பது அறச்செயலாகும். அறம் செய்வதால் பொருளுக்கு அழிவு வராது. பொதுவாக பொருளும் இன்பமுமே மக்களுக்கு வாழ்வாதாரமாக இருந்தாலும் கூட இவை இரண்டிற்குமே அறமே மூல காரணமாகும். பிறருக்குச் செய்யும் அறத்தின் மூலம் தான் அடைய முடியும் இப்படி அறம் செய்வதனால் ஏற்படும் நன்மைகளைப் பற்றியும் சங்க இலக்கியங்களும் நீதி இலக்கியங்களும் மிகவும் தெளிவாக எடுத்துக் கூறியிருப்பதை நாம் அறிய முடிகிறது. எனவே சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்கள் குறிப்பிடும் அறங்களை குறித்து இக்கட்டுரை விவரிக்கிறது.

**கலைச்சொற்கள்:**

மன்னுதல்,இறைஞ்சுக, நான்மறை, முக்கட் செல்வன், சிதறு, இலமே, பெரியோர், இலக்கியங்கள், படூஉம், கயல், நரைமுள், அன்ன, மூப்பின்,பயன்இல், தொக்குயிர், வெளவும், பொதுமை, மூவர் .

**முன்னுரை:**

உலகத்தில் சமுதாயப் போக்கிற்கு ஏற்பச்சாய்ந்து கொடுத்துக் கொண்டே தத்தம் நிலையில் தளராத மனிதனே அறிஞன் எனப்படுகிறான். அதுபோல காலங்காலமாகத் தோற்றமும் மாற்றமும் வளர்ச்சியும் பெற்று வரும் சமுதாயத்தின் மனநிலைக்கு ஏற்ப பொருந்தி வரும் நீதிகளே அழியாத நீதிகள் நிலைத்த நிதிகள். மக்களின் சமுதாய நீதிகளில் ஒரு குலத்திற்கு ஒரு நீதி என்ற நச்சுத்தன்மை கலக்குமானால் தனி மனிதனுடைய தன்னலநோக்கு என்ற வேர்ப் புழு விழுமானால் நீதிக்கற்பம் நிலைக்காதுசாய்ந்து விடும். பொது நோக்குடையவை எந்தப் புயலுக்கும் சாயாமல் நிலைத்து வாழும். அத்தகைய நீதி நூல்களின் மணிமுடியாக திகழ்வது திருக்குறள் ஒன்றே என்பதை இன்றைய உலகம் உணர்ந்திருக்கிறது. இருப்பினும் இதற்கு முன்பே சங்ககாலத்தில்

தோன்றிய இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்கள் கூறும் அற பண்புகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அறம் விளக்கம்:**

இலக்கியங்களே தனிமனித வாழ்க்கைக்கும், அரசியல் வாழ்க்கைக்கும், சமுதாய இனப்பெருக்க வாழ்க்கைக்கும் உரிய அறங்களை வழங்குகிறது"இந்த அறம் என்ற சொல்லிற்கு ஒத்த பொருள் நிறைவான பெயரொன்றும் கீழை நாட்டு-மேலைநாட்டு மொழிகளில் இல்லாமையால் தருமம் என்ற சொல்லாலே என் ஆங்கில மொழிபெயர்ப்பில் ஆளுகிறேன்"என்கிறார் கனம் இராசாசி-1 தருமம் என்ற சொல்லடியாகப் பிறந்த தருமவான் என்ற சொல்லாட்சி இருக்கு வேதத்தில் அத்தியாயம் 9 காண்டம் 24 இல் உள்ளது. அதற்கு ப் பகுதி ப்பொருளாக தாங்குபவன் எனப் பொருள் தந்துள்ளது. அங்கன மாயின் தருமம் என்ற சொல் தாங்கப் பெறுவது என்பதாகும் இதனை விட அறம் என்ற சொல் அவ்வப்போது ஆன்றோர் ஆட்சியும் ஆவணச் சான்றும் கொண்டு பரந்து விரிந்து தன்னலம் கருதாத நன்மைகளைக் குறிப்பதால் சிறந்ததாகும். "அறம் என்பது நல்வினை, ஏழைகட்குக்கொடுப்பது, நோயாளிகளுக்கு மருந்து கொடுப்பது நடுநிலை அறம் போலும் கூற்றம் இன்னும் பல நிலைகளில் விளக்கம் தரப்படுகிறது.-2

**தகுதி அறிந்து அறம் செய்தல் :**

பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிக்கிழார் வாழ்த்தும்போது வேந்தே உனக்கு எல்லா உலகிலும் உருவும் புகழும் உண்டாக வேண்டும் நின் கோல் ஒருதிறம் பற்றாது நடுநிலை நிற்க வேண்டும் நின் படை குடி முதலியன சிறக்க வேண்டும் பகைப்புலத்து வென்ற நன்கலப்பொருள்களைத் தகுதி அறிந்து பரிசிலர்க்கு வழங்கிஉயர்வதோடு முக்கட் செல்வன் நகர்வலம் செய்யும்போது நின் குடை பணிய வேண்டும் நான்மறை முனிவர் கை கவிழ்த்து வாழ்த்துங்கால் நின்சென்னி தாழ வேண்டும் பகைப்புலத்து கடும் புகையால் நின் கண்ணி வாட வேண்டும். மகளிர் கூட்டத்திற்கு சினமின்றி மெல்லியனாக இருக்க வேண்டும். மதியமும் ஞாயிறும் போல இந்நிலமிசை வாழ வேண்டும் என வாழ்த்துவதில் பணிக என்பதனால் வீடும் ,இறைஞ்சுக என்பதனால் அறமும் ,வாடுக என்பதனால் பொருளும், தணிக என்பதனால் இன்பத்தையும் கூறினார் காரிக்கிலார். இதனை"

**பரிசின் மாக்கட்கு வரிசையின் நல்கிப் பணியியர்**
**இறைஞ்சுக பெரும நின் சென்னி சிறந்த**
**நான்மறை முனிவரேந்துகை யெதிரே"-3**

என்னும் புறநானூற்றுப் பாடல் மூலம் கூறுகிறார். இங்கு தகுதி அறிந்து அறம் செய்தல் வேண்டும் என்கிறார் காரிக்கிழார். இதனை திருவள்ளுவர்

**"பொது நோக்கான் வேந்தன் வரிசையாக நோக்கின்**
**அது நோக்கி வாழ்வார் பலர்"-4.**

என்னும் குறள் மூலம் கூறுகிறார்

**ஈதல் அறம்:**

செல்வத்துப்பயன் ஈதலே ஆகும். உறையூர் முதுகண்ணன் சாத்தனார் சோழன் நலங்கிள்ளியைப் பாடும் பொழுது உலக மக்களின் பிறப்பில் காணப்படும் மனவளம் குன்றிய சிதடு, உறுப்பு குறையுள்ள உடல், கூன், குள்ளம், ஊமை, செவிடு, விலங்குத்தன்மை, பித்து ஆகிய எண்வகை எச்சங்களும் ஒருவருக்குப் பிறப்பில் பொருந்துவது குற்றமாகும். காட்டை இடமாகக் கொண்டு வாழும் உன்னுடைய பகைவர் போன்று அல்லாமல் கூத்தர் ஆடுகளம் போன்ற அகநாட்டை நீ யுடையையாதலால் நீ பெற்ற செல்வம் அறம் பொருள் இன்பங்களை ஆற்றுவதற்காகவே ஆகும். அவ்வாறு இல்லை எனில் மேலே கூறப்பட்டுள்ள பிறப்புண்டாகும் என்று நளங்கிள்ளிக்கு நல்லறிவு கூறும் போது,

**"அதனால் அறனும் பொருளுமின்பமுமூன்றும்**
**ஆற்றும் பெரும நின் செல்வம்**
**ஆற்றாமைந்நிற் போற்றாமையே "-5**
என்னும் புறநானூற்றுப் பாடல் மூலம் கூறுகிறார். மேலும் வேந்தே உன் திருநாட்டில் உன் புகழ்பாடும் பாணர் நிறைந்திருத்தல் வேண்டும். எப்போதும் கொடியவர்களை அளிப்பதும் நல்லவர்களுக்கு உதவுவதுமாக இருப்பாயாக நல்லது செய்தால் நன்மையும் தீயது செய்தால் தீமையும் விளையாது என்பவர் பக்கம் சேராதே பெற்றது போதும் என்று கூவைக்கொடி படர்ந்த சிறிய நாலுகால் பந்தல் மனையில் வாழ்கின்றனர் அவர்களின் வாழ்வு செழிக்க நீ உதவ வேண்டும். வந்தவர்களுக்கு எல்லாம் உதவும் பண்புடையதாக உன் வாழ்நாள் செய்கை அமைய வேண்டும். விழாவில் இசைமுழக்குவோர் வந்து போவது போல வாழ்க்கை நிலை இல்லாதது. நகைத்து மகிழும் பக்கம் உன் சுற்றம் சேரட்டும் (பகைத்து மகிழும் பக்கம் சேரவேண்டாம்) உன் செல்வம் புகழின் பக்கம் இருக்கட்டும் என்பதை உறையூர் முதுகண்ண சாத்தனார் அவர்கள்,ள

**"நல்லதனலனுந் தீயதன்றீமையும்**
**இல்லையென்போர்க்கின்னாகிலியர்**
**நகைப்புறனாக நின் சுற்றம்**
**இசைப்புறனாகநீ யோம்பிய பொருளே "-- 6 .**
**என்ற புறநானூற்றுப் பாடல் மூலம் கூறியுள்ளார்.**

**அறமே வெற்றிக்கு வழி:**

பாண்டியன் இளவந்திகை பள்ளி துஞ்சிய நன்மாறனை மதுரை மருத னிலநாகனார் அவர்கள் கடிய சினத்தை உடைய கொல்லும் யானைப்படை, விரைந்து செல்லும் செருக்குடைய குதிரைப்படை, உயர்ந்த கொடிகளுடைய தேர்ப் படை , நெஞ்சில் வலிமையுடன் போரை விரும்பும் காலாட்படை ஆகிய நான்கு படைகளும் உன்னிடம் இருந்தாலும் பெருமைமிக்க அறநெறி தான் உன் ஆட்சியின் வெற்றிக்கு அடிப்படையாகும். அதனால் இவர் நம்மவர் என்று நடுவு நிலைமையிலிருந்து தவறாமல் இவர் நமக்கு அயலார் என்று அவர் நற்குணங்களை ஒதுக்கித் தள்ளாமல் கதிரவனைப் போன்ற வீரம், திங்களைப் போன்ற குளிர்ந்த மென்மை, மழை போன்ற வண்மை ஆசிய மூன்றையும் உடையவனாகி இல்லை என்பார் இல்லை என்னும் படி நீ நெடுங்காலம் வாழ வேண்டும் என்பதை ஆழமான திரையுடைய கடலின் மேல் உள்ள வெண்ணிற அலைகள் மோதும் திருச்செந்தூரில் முருகக்கடவுள் நிலைபெற்றிருக்கும் அழகிய அகன்ற துறையில் பெருங்காற்றால் திரட்டப்பட்ட கரு மணலினும் நீ பலகாலம் வாழ்வாயாக என்பதை"

கடுஞ்சினத்த கொல்களிறுங் கதழ்பரிய கலிமாவும் நெடுங்கொடிய நிமிர் தேரு நெஞ்சுடைய புகன்மறவரும் என நான்குடன் மாண்ட தாயினுமாண்ட
அறநெறி முதற்றே யரசின் கொற்றம் "-- 7.
என்னும் புறநானூற்றுப் பாடல் வழி எடுத்துக் கூறுகிறார்.

**8. நற்பண்பும் நற்செயலும் நல்ல அறமே:**

ஒருவருடைய வாழ்வும் தாழ்வும் நிலத்தைப்பொறுத்தது அல்ல. அந்த நிலத்தில் வாழ்கின்ற ஆடவரைப் பொருத்தது. நற்பண்பும் நற்செயலும் உடைய ஆடவரே நாட்டின் நிலத்திற்கும் புகழுக்கும் வளத்திற்கும் காரணம் ஆவார். தீய நிலமாக இருந்தாலும் நற்பண்பு உடையவர்கள் அங்கே வாழ்ந்தால் அத்தீய நிலம் நல்ல நிலம் என்றே கூறப்படும். ஆனால் நல்ல நிலமாகவே இருந்தாலும் அங்கே தீயவர்கள் வாழ்ந்தால் அந்த நல்ல நிலம் தீய நிலம் என்றே கருதப்படும் இதுவே உலகத்தின் இயற்கை என்பதை ஔவையார் "
நாடா கொன்றோ காடா கொன்றோ

அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவராடவர்
அவ்வழிநல்லை வாழிய நிலனே”--8.
என்னும் புறநானூற்றுப் பாடல் வரிகள் மூலம் விளக்குகிறார்.

**9. புகழாமையும் இகழாமையும் சிறந்த அறம்:**

இராமநாதபுரம் மாவட்டம் மகிபாலன்பட்டி பூங்குன்றம் ஆகும் கணியன் பூங்குன்றனார் அவ்வூறினராவார் பண்டிதமணி கதிரேசன் செட்டியாரும் இவ்வூரினரேஆவார். இச்சான்றோர்கள் இடரினும் தளரினும் இன்பத்திலும் துன்பத்திலும் எவ்விடத்தும் அயராத உள்ளமும் கலங்காத அமைதியும் உடையவர். நலம் செய்தார் என ஒருவரை பாராட்டலும் தீமை செய்தார் என ஒருவரை இகழ்தலும் இல்லாதவர். இவ்வாறே பெரியோர் என ஒருவரை புகழ்தலும் சிறியோர் எனப் புறக்கணித்தலும் அறியாதவர். உயிர்கள் அனைத்தும் தாம் தாம் செய்த வினைக்கு ஏற்ப இன்பமும் துன்பமும் உயர்வும் தாழ்வும் செல்வமும் வறுமையும் எய்தும் என்பதை நூல்களாலும் நடைமுறையானும் நன்கு அறிந்தவர் இப்பண்பினால் கணியன் பூங்குன்றனார் எத்தகைய வேந்தரையும் வள்ளல்களையும் பாடவில்லை அதனால் அக்காலச் சான்றோர்கள் கேட்டதற்கு இணங்க”
யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தர வாரா
நோதலும் தனிதலும் அவற்றோரன்ன
சாதலும் புதுவதன்றே வாழ்தல்”--9.
என்னும் புறநானூற்றுப் பாடல் மூலம் விளக்கியுள்ளார்.

**10. தீமை செய்யாமல் இருப்பதே சிறந்த அறம்:**

நரிவெரூஉத்தலையார் காலத்துச் சான்றோர் சிலர் பரிசில் பெற வேண்டி மன்னர்களை வீணாகப் புகழ்ந்தும் போர் புரிய ஊக்குவித்தும் தங்களின் புலமை வளத்தைத் தவறாகப்பயன்படுத்தி உள்ளனர். இதனை அறிந்த இவர் நூல் பலவும் கற்றுத் தேர்ந்து கெண்டை மீனின் முள் போல விரைந்து நிற்கும் நரை முடியும் முதுமை எய்தியதால் கன்னங்களில் வரி வரியாக சுருக்கமும் ஏற்பட்டு பயனில்லாத முதுமையை அடைந்த சான்றோர்களை ப்பார்த்து இறப்பு உங்களைத் தழுவும் தருணத்தில் ஐயகோ தவறு செய்து விட்டோமே என்று வருத்தப்படுவதால் பயனில்லை நீங்கள் யாருக்கும் நன்மை தரும் செயல்களைச் செய்யாவிட்டாலும் கூட பாதகம் இல்லை தீமை விளைவிக்கும் செயல்களைச் செய்யாமல் தவிர்த்திட வேண்டும் அதைத்தான் இந்த உலகமே உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறது. அதுமட்டுமின்றி இதுவே உங்களது பிறவி பயனை அடைவதற்கு வழி காட்டும் நன்னெறியும் நல்ல அறமும் ஆகும் என்பதை
”நல்லது செய்தலாற்றீராயினும்
அல்லது செய்தலோம்புமினதுதான் எல்லாருமுவப்பதன்றியும்
நல்லாற்றுப்படுஉநெறியுமாரதுவே.”--10.
என்னும் புறநானூற்றுப் பாடல் மூலம் விளக்குகிறார் மேலும்”
தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப்படும்” --11.
என்ற குரல் மூலம் தீய செயல்கள் தீமையை தரும் அதனால் அதைச் செய்யாமல் இருப்பதே சிறந்த அறம் என்கிறார் திருவள்ளுவர்.

**11. உலக வாழ்வியல் அறம்:**

சேர சோழ பாண்டியர் என்னும் மூவர் உலகத்தையும் ஒரு குடையின் கீழ் ஆண்ட பேரரசர்க்கும் வாழும் ஆண்டுகளும் துய்க்கும் செல்வங்களும் வரையறுக்கப்பட்டுள்ளன. அவரவர்களுக்கு வரையறுக்கப்பட்ட அளவுக்கு மேல் எவராலும் துய்க்க இயலாது இது அவரவர்களுக்கு படைக்கப்பட்டுள்ள தெப்பம்

“விதி “ஊழ் என்ற அடிப்படையில் நடக்கும் என்றெல்லாம் கூறுவர். அவரவர் செய்யும் அறவினையை மேல் உலகத்து இன்ப விளைவிற்கு வித்தாகும். இந்த உலக வாழ்வியல் ஆகிய கடலைக் கடந்து மேல் உலகமாகிய அக்கரை சேர்வதற்கு அறவினையே தெப்பமாய் துணை செய்யும் இந்தத் தெப்பத்தை கைவிட்டு விட்டு யாராலும் செல்ல முடியாது.
எமன் ஒருவர் உயிரை எடுத்துப் போன பின்னால் மற்றொருவர் அழுவதை அன்றி இவ்வுலகத்தை விட்டு விட்டு அவ்வுலகத்துக்கு அவருடன் செல்ல இயலாது. இதுவே உலகியல் மாட்சியாகிய வாழ்வியல் அறமாகும். இதனை
”பொதுமை சுட்டிய மூவர் உலகமும்
பொதுமையின்றி ஆண்டிசினோருக்கும்----------------------அறவணை அன்றே விழுத்துணையத்துணைப் புணணகைவிட்டோர்க்கு அ அரிதேதுணைஅழத்
தெக்கு உயிர்வெளவுங்காலை
இக்கரை நின்று இவர்ந்து உக்கரை கொளலெ ”--12.
என்ற புறநானூற்று பாடல் வரிகள் மூலம் உலக வாழ்வியல் அறத்தை குறிப்பிட்டுள்ளார் பிரமனார் என்னும் புலவர் மேலும் இதனை”
வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பு” --13.
என்கிறார் தொல்காப்பியர். இந்த நிலவுலகில் உடை வேல் மரத்தின் சிறிய இலை அளவு இடமும் பிறர்க்கின்றித் தாமே ஆண்ட வேந்தர்கள் பலர் இருந்தனர். ஆனால் முடிவில் தன் நாட்டை பிறர் கொள்ள அவர் இறந்தனர். அதனால் இறவாது நின்றோர் ஒருவரும் இல்லை இறத்தல் உண்மை பொய்யென்று எனவே இன்ன நாளாகிய இறக்கும் நாள் வரும் முன்னே நீ இவ்வுலகியலைத் துறந்து உனக்குரிய நல்வினையாகிய தவத்தைச் செய்வாயாக. ஏனெனில் யாக்கையும் செல்வமும் நிலையற்றது என்ற உலக வாழ்வியல் அறத்தை”
உடையிலை நடுவணதிடைபிறர்க்கின்றித்
தாமே யாண்ட வேமங் காவலர் --------------------------------------- இன்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பகம் முழுதுடன் துறந்தே ”--14.
என்னும் புறநானூற்றுப் பாடல் வழி விளக்கியுள்ளார் ஐயாதிச்சிறுவெண்றே யார். மேலும் இதனை” மாற்றரும் கூற்றம் சாற்றிய பெருமையும்”--15. என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

**12. இறப்போர்க்கு ஈவதே சிறந்த அறம்**:

சேரமான் மாவண் கோவும் பாண்டியன் கானப்போர் தந்த உக்கிரப் பெறுவழுதியும் சோழன் இராய சூயம் வேட்ட பெரு நற்கிள்ளியும் ஒருங்கிருந்த சூழ்நிலையில் ஔவையார் அவர்களை வாழ்த்தும்போது தமிழ் வேந்தர் மூவரும் மனத்தால் ஒன்றுபடாமைக்கு காரணமாக இருந்தது ஒவ்வொருவருக்கும் தாம் ஒருவரே மேம்பட்டு நிற்க வேண்டும் மற்றவர்கள் தன்னுடைய ஆணை வழி அடங்கி நடக்க வேண்டும் என்ற வேட்கை ஆகும். அந்த வேட்கை நாட்டின் மேல் நின்றால் அதனை விலக்கி ஒருமை மனம் உடையர் ஆகுதல் வேண்டும் என்று கருதினார் ஔளவையார். நாகலோகத்தைப் போன்று மிகுந்த வளமிகுந்த பகுதியாக உள்ளது இந்த நிலவுலகம் இதனை ஒருவர் மட்டும் தாமே ஆள வேண்டும் என்று எண்ணி ஏனைய இருவரையும் பொழருது வென்று நாட்டினை தன்னடிமைப்படுத்திய வேந்தரும் இறந்தனர். அவ்வாறு இறந்தபோது தமிழகம் அவர் பின் சென்றொழியாது வேறொருவருக்கு என்று கருதாது யார் தன்னை தாங்குகிறார்களோ அவர்கள் அடியின் கீழ் இவ்வுலகம் நிற்கும் இயல்பினை உடையதாகும். ஆதலால் நீவீர் உம்முடைய நாட்டை இனிது தாங்கும் முகத்தான் பார்ப்பார்க்கும் இரவளர்க்கும் வேண்டுவன நல்கி வாழ்தல் வேண்டும். இதுவே

நீவீர் செய்யத்தக்க நல்வினையாகும். இந்த நல்வினையை உம்மை இனிது வாழச் செய்வதாகும். உமக்கு இந்த நல்வினையைக்காட்டிலும் வேறு ஒரு துணையும் இல்லை. இவ்வளவே தான் அறிந்தது என்று கூறினார். இந்த நல்வினையை மேற்கொண்டு நீவிர்மூவரும் ஒருமை மனத்தோடு வாழ்வீர் ஆயின் வானத்தில் தோன்றும் விண்மீன்களைக்காட்டிலும் பெரு மழையினால் தோன்றும் நீர்த்துளியைக் காட்டிலும் பல்லாண்டு நெடிது வாழ்வீர். இல்லையேல் வீழ்வீர் வேரோடு ஒழிவது நிச்சயம். இத்தமிழகம் வேற்று மன்னர் ஆட்சிக்கு உட்பட்டு தன் மொழி, கலை, பண்பாடு, செல்வம், வாணிகம் முதலியவற்றை பலவற்றினும் சீரழித்து வேறொருவருக்கு அடிமை நாடாகிவிடும் என்று அவர்களை உய்த்துணர் வைத்தார் ஔவையார். அப்பேதை மன்னர்கள் அவர் கூற்றை மனம் கொள்ளாவிட்டால் அவர்கள் செய்த தீய செயலால் தமிழகம் மொழியும், கலையும், பொருளும், பண்பாடும் குன்றிப்போய் பிற நாட்டவர் ஆட்சி யானைக்குத் தலை தாழ்ந்து செல்வதாகும். இதனால் நாட்டிற்கு வறுமை உண்டாகும் என்று கூறுகிறார் ஔவையார். இதனை

" இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி
வாழ்தல் வேண்டும் இவண் வரைந்த வைகல்
வாழச் செய்த நல்வினை அல்லது
ஆழுங்காலைப் புணைபிறிதுஇல்லை "-16.

என்ற புறநானூற்று பாடல் மூலம் குறிப்பிட்டுள்ளதை காணலாம். தான் பெற்ற செல்வங்களை தனக்கென வைத்துக் கொள்ளாமல் உங்களுக்கென்று வழங்கப்பட்ட வாழ்நாள் எல்லாம் வழங்க வேண்டும் இவ்வாறு வாழ்ந்து பிறரையும் வாழச் செய்வது தான் நல்வினை. இந்த நல்வினை உங்களை ஏற்றிச்செல்லும் மிதவையாக உதவும், வாழ்க்கை துன்பத்தில் மூழ்கும்போது உதவும் இந்த நல்வினை போல வாழ்க்கைக்கு இன்பம் தந்து உதவக்கூடிய வேறு ஒன்றுமே இல்லை.

**13. முடிவுரை:**

1. ஒருவரின் தகுதி அறிந்தும் தரம் அறிந்தும் பொருள் தந்து உதவுதல் சிறந்த அறமாகும்.

2. ஒருவர் நிறைந்த செல்வங்களை பெற்றிருப்பது இரவலர்களுக்கு கொடுத்து மகிழ்வதற்கே என்ற சிறந்த அறத்தை எடுத்துக் கூறுகிறது.

3. ஒருவரை நம்மவர் என்று பாராமல் நடுவு நிலையோடும் இவர் அயலார் என்று பாராமல் அவரின் நற்குணங்களை ஒதுக்காமல் கதிர்வனை போன்று வீரமும் திங்களைப் போன்று மென்மையும் மழையைப் போன்று வண்மையும் கொண்டு இல்லை என்பார் இல்லை என்ற அறநெறியோடு வாழ வேண்டும் என்பதும் உணரப்படுகிறது

.4. நற்பண்பும் நற்செயல்களுமே சிறந்த அறமாக கருதப்படுகிறது .

5. ஒருவரை புகழாமையும் இகழாமையுமே சிறந்த அறமாக கருதப்படுகிறது.

6. தீமையைச் செய்யாமல் இருப்பதே சிறந்த அறமாகும்.

7. உலக வாழ்வியல் ஆகிய கடலைக் கடந்து மேல் உலகமாகிய அக்கரை சேர்வதற்கு அறவினையே தெப்பமாய் துணை செய்யும் என்பதை அறிய முடிகிறது.

8. இரப்போர்க்கு இல்லையென்று ஈவதே சிறந்த அறமாகக் கருதப்படுகிறது. மிகவும் அருமையான செய்திகளைச் சங்க இலக்கியம் எடுத்துக் கூறியுள்ளன ஒவ்வொரு பாடல்களிலும் வியக்கத்தக்க அறச் சிந்தனைகளை எடுத்துக் கூறியிருக்கிறது. சங்கங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போனாலும் அன்று தோன்றிய இலக்கியங்கள் கூறியுள்ள அறச் சிந்தனைகள் காலமெல்லாம் நிலைத்து நிற்கின்றன. அதுபோல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே புறநானூற்றுப் பாடலில் கூறப்பட்டுள்ள திருச்செந்தூர் முருகன் கோவில்

இன்றளவும் சிறப்புடன் அமைந்திருப்பதை கண்டு மகிழ்கிறோம். எனவே இந்த ஆய்வு இன்னும் பல சிறந்த ஆய்வுகளை உருவாக்குவதற்கு துணையாக அமையும் என்பதில் எந்த அளவும் ஐயமில்லை.

துணை நூற்பட்டியல்:

1. சி.ஆர். ஆங்கில மொழிபெயர்ப்பு இராசாசி --2.
2.ஞா. தேவநேயப் பாவாணர் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகராதி தொகுதி -1 ப.523.
3. செவ்விலக்கியக்கருவூலம்--புறநானூறு--1.ஔவை சு. துரைசாமி பிள்ளை ப.20,21
.4. திருக்குறள் கருத்துரை திருந்திய பதிப்பு ப. பகலவன் --ப.117
5. செவ்விலக்கியக் கருவூலம் புறநானூறு--1 ஔவை சு.துரைசாமிபிள்ளை.ப. 104.
6. மேலது--ப.107. ய
7. மேலது -- ப.184
.8. மேலது --ப.526.
9. மேலது -- ப. 537.
10. மேலது -- ப. 544.
11. திருக்குறள் உரைக்களஞ்சியம் அறத்துப்பால் -- இல்லறவியல் -ச. தண்டபாணி தேசிகர் --ப. 562.
12. புறநானூறு தெளிவுரை புலியூர்க்கேசிகன் --ப. 352.
13. தொல்காப்பியம் மூலமும் உரையும் புலியூர்க்கேசிகன் --ப. 377.
14. புறநானூறு தெளிவுரை புலியூர்க்கேசிகன் --ப. 359.
15. தொல்காப்பியம் மூலமும் உரையும் புலியூர்க்கேசிகன் --ப. 284.
16. புறநானூறு தெளிவுரை புலியூர்க்கேசிகன் --ப. 363.